IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.236/2022
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 2.40 p.m.

வா.சா.1 சாட்சி ரஞ்சிதம் க.பெ.தங்கப்பாண்டி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additioanl District Munsif on 24.09.2025 in accordance with the provisions of Act XX141.**

2,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. மொத்தம் 12இலக்கச் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இறந்துபோன 1ம்பிரதிவாதி எனது தந்தை என்றால் சரிதான். 12இலக்கச் சொத்துக்களும் எனது தந்தைக்கு பூர்வீகச் சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தந்தையான 1ம்பிரதிவாதிக்கு 2முதல் 5 பிரதிவாதிகள் தான் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. 6ம்பிரதிவாதி 5ம்பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். எனது தந்தை 16.7.2015ல் 6ம்பிரதிவாதிக்கு மோசடியாக கிரைய ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரிதான். தாவா 12இலக்கச் சொத்துக்களிலும் 1/6 பங்கு கேட்டும், மேற்படி 16.7.2015ம் தேதியிட்ட 1ம்பிரதிவாதி 6ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் செல்லாது என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. தாவாச் சொத்தில் எனக்கு 1/6 பங்கு உள்ளதுபோல் 2 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு தாவாச் சொத்தில் 1/6 பங்கு கிடைக்கத்தக்கது என்றால் சரிதான். மேற்படி 2 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு தாவாச் சொத்தில் 1/6 பங்கு கிடைப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். எனது தந்தை உயிருடன் இருக்கும்போது வழக்குச் சொத்தில் பாகம்

பிரித்து கொடுக்காததால் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. எனது தந்தை உயிருடன் இருக்கும்போது எனக்கு சீர்வரிசை மற்றும் நகைகள், ரொக்கப்பணம் கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை.

**5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

5, 6 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. எனவே சாட்சி விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:2.45p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.24 17:43:43 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருமங்கலம்.